1977 ஆகஸ்ட் 5]

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நிதிப் பற்றுக்குறையில் எடுத்துக்கொள்ளவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்து ஒன்றிய மருத்துவமனைகளைப் பற்றியும் கேட்டார்கள். நான் கேட்டது நகர்மன்றத்தைச் சேர்ந்த மருத்துவமனை. பஸ்ட் எய்டு சிகிச்சை தவிர படுக்கை வசதி எதுவும் கிடையாது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனையாக எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இதுபோன்ற கோரிக்கைகள் நிறைய வந்திருக்கின்றன. இவைபற்றி நாங்கள் அக்கறையோடு கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

மாங்குடி பகுதியில் நிலக்கரிப் படிவம்.

*17 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகா, திருமங்கலம் மாங்குடி பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் இருப்பதாக ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (அ) & (ஆ) இல்லை; கண்டுபிடிக்க பரிசீலித்தோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தாலுகாவில் திருமங்கலம் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது, எல்லாச் செய்தித் தாள்களிலும் அந்தச் செய்தி தகுந்த முறையில் போடப்பட்டிருந்தது. நிலக்கரி அங்கே இருப்பதற்கான வாய்ப்பிருப்பதாக எல்லாத்தரப்பட்ட செய்தித்தாள்களிலும் அது வெளியிடப்பட்டிருந்தது. எனவே அருள்கூர்ந்து அரசாங்கம் அதை மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பகுதியில் அத்தகைய நிலக்கரிச் சுரங்கம் விரைவில் அமைய ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பழுப்பு நிலக் கரிச் சுரங்கம் பற்றித்தான் பிரச்னை. ஆகவே அதுபற்றி விசாரித்து பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண். 18.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர். முதல்வர் அவர்களின் கேள்விக்கு அதிகத் துணைக் கேள்விகள் போடுவதற்கு அனுமதிப்பது சிறந்ததாக இருக்கும். ஏனெனில் கேள்வியே முதல் அமைச்சர் அவர்களைப் பொறுத்துள்ளது. அகவே அதிக விளக்கங்கள் வருவதற்கு இருக்கிறது. எனவே தாங்கள் தயவுகூர்ந்து கூடுதல் துணைக் கேள்விகள் போடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ்: திருமங்கலம் தாலூகாவில் மாங்குடி பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள ஆய்வு நடைபெற்றதா? எப்போது நடைபெற்றது? அதன் விவரங்களை முதல் அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தயவுசெய்து தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, வினா எண் 19 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் தொழிலாளர்கள்.

*18 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊழியர்களின் துயர் துடைக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஊதியக் குழு பரிந்துரையின்படி இடைக்கால நிவாரணம் அளிக்காத காரணத்தால் "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "தினமணி" நிறுவனங்களில் வேலைசெய்யும் தொழிலாளர் 26-6-1977 முதல் 6-7-1977 முடிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை இரண்டாவது சரக